

We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)
## மார்ச் - 2020

We Are Here..!! To Guide You..!!



# WeShine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## மார்ச் - 28.03.2020

We Shine Academy™
guiding you to get through

Main Office @

**WeShine Study Circle**
Chrompet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**WeShine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, GokulArcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu– 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்

- தேசிய நிகழ்வுகள்
- சர்வதேச நிகழ்வுகள்









## தேசிய நிகழ்வுகள்

- கொரோனா வைரஸின் நுண்ணோக்கி படங்கள், இந்தியாவில் முதல்முறையாக வெளியிடப்படப்பட்டுள்ளன. மகாராஷ்டிர மாநிலம், புனேயில் செயல்படும் தேசிய வைராலஜி ஆய்வு நிறுவனத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்களால் இப்படங்கள் எடுக்கப்பட்டுள்ளன.
    - **கரோனா பாதிப்பு உறுதி செய்யப்பட்டவரிடமிருந்து சேகரிக்கப்பட்ட மாதிரிகளிலிருந்து அதிநவீன மின்னணு நுண்ணோக்கி மூலம் கரோனா வைரஸின் படங்கள் எடுக்கப்பட்டுள்ளன.**
    - 'சார்ஸ்-சிஓவி-2' எனப்படும் அந்த வைரஸின் படங்கள், இந்திய மருத்துவ ஆராய்ச்சி இதழில் வெளியிடப்பட்டுள்ளன.
    - **செய்தி துளிகள்:**
        - இந்த வைரஸானது, கடந்த 2012-ஆம் ஆண்டில் பரவிய 'மெர்ஸ்-சிஓவி' வைரஸ், கடந்த 2002-இல் பரவிய 'சார்ஸ்-சிஓவி' வைரஸ் ஆகியவற்றின் தோற்றத்தை ஒத்திருப்பதாக தேசிய வைராலஜி ஆய்வு நிறுவனத்தின் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர்.

- கொரோனா வைரஸை மக்கள் துரத்துவதற்காக அவர்களுக்கு உதவும் பொருட்டு மத்திய நிதி அமைச்சம் புதிய வசதிகளை அறிமுகம் செய்துள்ளது. **No ATM Withdrawal Charge for next 3 months**
    - மேலும் நிதி அமைச்சர் வெளியிட்ட அறிவிப்பு என்னவென்றால், சேமிப்பு கணக்கில் குறைந்தபட்ச இருப்பு

(minimum balance) பராமரிப்பது தொடர்பாக, ஜூன் 30 வரை, குறைந்தபட்ச இருப்பு பராமரிக்காவிட்டால் விதிக்கப்படும் அபராத கட்டணமும் தள்ளுபடி செய்யப்படுகிறது என நிதி அமைச்சர் தெரிவித்தார்.

- **செய்தி துளிகள்**
    - நிதி அமைச்சகம் ஐந்து பிரிவுகளை கொண்டது.
    - பொருளாதார விவகாரங்கள் துறை (Department of Economic Affairs)
    - செலவு துறை (Department of Expenditure)
    - வருவாய் துறை (Department of Revenue)
    - நிதி சேவைகள் துறை (Department of Financial Services)
    - பங்கு விற்பனைத் துறை (Department of Disinvestment)

- **கொரோனா நிவாரண நிதியாக ரூ.50 லட்சம் வழங்கினார் சச்சின் டெண்டுல்கர். தலா ரூ.25 லட்சத்தை பிரதமர் நிவாரண நிதிக்கும் முதலமைச்சர் நிவாரண நிதிக்கும் வழங்கியுள்ளார்.**
    - **செய்தி துளிகள்**
        - அதேபோல் ரூ.8.3 கோடி நிதியுதவி செய்துள்ளார் உலகின் நம்பர் ஒன் டென்னிஸ் வீரர் ஜோகோவிச். மேலும் குழந்தைகளின் பசியைப் போக்க பிரபல நடிகை ஏஞ்சலினா ஜோலி ரூ.7.50 கோடி நிதியுதவி செய்துள்ளார்.

## சர்வதேச நிகழ்வுகள்

- 8 மாநிலங்களுக்கு பேரிடர் நிவாரணம் ரூ. 5,700 கோடி மத்திய அரசு ஒப்புதல்.
    - தற்போது ஒதுக்கீடு செய்யப்பட்ட இந்த கூடுதல் நிதி தேசிய பேரிடர் நிதியத்தின் (என்டிஆர்எ.ஃ.ப்)-இன் கீழ் அங்கீகரிக்கப்பட்டதாகும்.
    - அதன்படி **பீகாருக்கு ரூ.953.17 கோடியும், கேரளத்துக்கு ரூ.460.77 கோடியும், நாகலாந்துக்கு ரூ.177.37 கோடியும், ஒடிஸாவுக்கு ரூ.179.64 கோடியும், மகாராஷ்டிரத்துக்கு ரூ.1,758.18 கோடியும், ராஜஸ்தானுக்கு ரூ.1,119.98 கோடியும், மேற்கு வங்கத்துக்கு ரூ.1,090.68 கோடி வெள்ள பாதிப்புகளுக்காகவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**
    - **செய்தி துளிகள்:**
        - கடந்த 2019-ஆம் ஆண்டில் வெள்ளம், நிலச்சரிவு, 'புல்புல்' புயல், வறட்சி ஆகிய பேரிடரால் பாதிக்கப்பட்ட 8 மாநிலங்களுக்கு மத்திய அரசால் நியமிக்கப்பட்ட மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா தலைமையிலான உயர்மட்டக் குழு ரூ.5,751.27 கோடியை கூடுதல் நிதியாக ஒதுக்கீடு செய்ய ஒப்புதல் அளித்தது.

- **இஸ்ரேலில் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவும் முன்னாள் ராணுவ தலைமை தளபதி பென்னி காண்ட்ஸும் இணைந்து தேசிய**

**ஒற்றுமை அரசு அமைக்க ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.**

- சில நாட்களுக்கு முன்னர், முன்னாள் ராணுவ தலைமை தளபதியும் புளு அண்ட் வைட் கட்சித் தலைவருமான பென்னி கான்ட்ஸை ஆட்சி அமைக்கும் முயற்சியை மேற்கொள்ளுமாறு அதிபர் கேட்டுக் கொண்டார்.
- வரும் 18 மாதங்களுக்கு நெதன்யாகு தலைமையில் கூட்டணி ஆட்சி அமையும். அதன் பின்னர், பென்னி கான்ட்ஸ் பிரதமராகப் பொறுப்பேற்பார்.
- **செய்தி துளிகள்:**
  - ஒரே ஆண்டுக்குள் இஸ்ரேல் நாடாளுமன்றத்துக்கு மூன்று முறை பொதுத்தேர்தல் நடத்தப்பட்டும், தனிப் பெரும்பான்மையுடன் எந்தக் கட்சியும் ஆட்சி அமைக்க இயலாத நிலை நிலவுகிறது.

## திருக்குறள்

**குறள் எண் :** 151

**குறள் பால் :** அறத்துப்பால்

**குறள் இயல் :** இல்லறவியல்

**குறள் அதிகாரம் :** பொறையுடைமை

**"அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை**
**இகழ்வார்ப் பொறுத்தல் தலை."**

**விளக்கம் :**

தன் மேல் நின்று தன்னைத் தோண்டுகின்றவரையும் தாங்கும் நிலம் போலத் தம்மை இகழ்வாரையும் பொறுத்துக் கொள்ளுதல் சிறந்த அறமாகும்.